**கற்பிட்டி பிரதேச சபை - 2024**

---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கற்பிட்டி பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கற்பிட்டி பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கற்பிட்டி பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்ப்பாசனம், நீர் வழங்கல் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளாரரால் பதிவு செய்யப்பட்ட லொறி பௌசர் கற்பிட்டி பிரதேச சபைக்கு கையளிப்பதற்கு மீளாய்வாண்டில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் பௌதீக ரீதியில் கையளிக்கப்படாது இருக்கும் போது ரூபா 8,000,000 பெறுமதியில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | லொறி பௌசர் வண்டியில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி இருந்தமையால் அந்த பழுது பார்த்தல் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அதனை எமது சபைக்கு பௌதீக ரீதியில் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக புத்தளம் நகர சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களைக் கணக்கீடு செய்யும் போது இருப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தி அதனைக் கையேற்ற பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது குளியாப்பிட்டி நகர சபையில் இருந்து கற்பிட்டி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த கம்பெக்டர் வண்டியின் 2024 சனவரி 29 இல் உள்ளவாறு மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 7,500,000 ஆக இருந்தமைக்கு வாகன மதிப்பீட்டு அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த வண்டியின் பெறுமதி ரூபா 9,000,000 ஆக ரூபா 1,500,000 அதிகரித்து ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சித் திணைக்களத்தின் இயந்திரப் பொறியியலாளரின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 7,500,000 ஆக காண்பிக்கப்பட்ட போதும் 2024 வருடாந்த காப்புறுதி மேவுகையினை பெற்றுக் கொள்வதற்காக காப்புறுதிக் கம்பனியால் வழங்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 9,000,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | வாகனத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியின் பிரகாரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்குச் சொந்தமான கார் வண்டி பழுதுபார்ப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய ரூபா 904,900 கடன் கொடுத்தோர் ஆக இரு தடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தவறினால் இரு தடவை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2025 இன் நாட்குறிப் இலக்கம் 02 இன் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் கூறுகளாக்கி விற்பனை செய்யப்பட்ட காணிகளில் பொது வசதிகளுக்காக சபைக்கு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த 122.22 பேர்ச் அளவான 03 காணிகள் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | தவறு ஒன்றினால் கணக்கீடு செய்வதற்கு முடியாது இருந்த சொத்துக்கள் 2025 ஆம் ஆண்டுக்கு உரிய கணக்குகளில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(3), 104(4) | மீளாய்வாண்டில் விபத்துக்கு உட்பட்டிருந்த இரண்டு வாகனங்கள் தொடர்பாக பரிசோதனைகள் நடாத்தி பொறுப்பு வாய்ந்த நபர் தீர்மானிக்கப்படவில்லை. | விபத்துக்கு உட்பட்ட வாகனங்கள் இலங்கை காப்புறுதிக் கம்பனியால் பழுது பார்ப்பதற்காக காப்புறுதிப் பணம் கிடைத்து பழுது பார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(2) | ஏதாவது பணிக்காக வழங்கப்பட்ட முற்பணம் உரிய பணிகள் முடிவடைந்த உடன் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 1990 ஆம் ஆண்டுக்கு முன் இருந்து தீர்த்து வைக்கப்படாத ரூபா 229,658 முற்பண மீதி காணப்பட்டது. | முற்பணத்தைப் பெற்றவர்கள் தொடர்பான தகவல்களை கண்டறிவதற்கு வசதீனமாக உள்ளமையால் எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 571(2) | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 4,209,868 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு பட்டியல் தயாரிக்கப்படுகின்றது. | மேற்படி |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 63,047,850 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,011,831 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானமான மூலம் | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| i. | ஆதன வரியும் வரியும் | 5,689 | 4,861 | 4,316 | 15,121 | 5,265 | 4,545 | 2,483 | 14,593 |
| ii. | வாடகை | 21,910 | 21,779 | 22,428 | 10,333 | 18,217 | 16,480 | 12,930 | 11,012 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,936 | 4,250 | 4,250 | - | 3,711 | 2,638 | 2,638 | - |
| iv. | ஏனைய வருமானம் | 8,300 | 4,581 | 4,581 | - | 8,225 | 4,336 | 4,336 | - |
| | மொத்தம் | 39,835 | 35,471 | 35,575 | 25,454 | 35,418 | 27,999 | 22,387 | 25,605 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| i. | 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு ஆதனவரி நிலுவை ரூபா 12,272,649 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 01 வருடத்திற்கு மேற்பட்ட 05 வருடங்களுக்கு குறைந்த ரூபா 9,567,595 மீதியும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 2,705,053 நிலுவை மீதியும் காணப்பட்டது. அந்த தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு உள்ள நிலுவைக்காக சிவப்பு அறிவித்தல் மற்றும் ஆதனங்களை தடை செய்யக் கூடிய ஆதனங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மிகுதி நிலுவையை விரைவாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு நீர் வரி நிலுவை ரூபா 333,338 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 327,591 நிலுவை மீதியும் காணப்பட்டது. | நிலுவைத் தொகையில் ரூபா 327,591 தொகை கடந்த 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்படுகின்றமையால் | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | அந்த தொகை பட்டியலில் இருந்து பதிவளிப்பதற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவை எடுத்தல் வேண்டும். |
| iii. | மீளாய்வாண்டின் இறுதியில் ஏக்கர் வரி நிலுவை ரூபா 1,093,145 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் 01 வருடத்திற்கு மேற்பட்ட 05 வருடங்களுக்கு குறைந்த ரூபா 133,839 நிலுவையும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 959,306 நிலுவை மீதியும் காணப்பட்டதுடன் அந்த நிலுவை தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | காணி மெய்மையாய்வுகள் மேற்கொண்டு உரிய உரிமையாளர்களைக் கண்டறிந்து வரியினை அறவிடுவதற்கும், அறவிட முடியாத வரியினை பதிவளிப்பதற்கு அங்கீகாரத்திற்கு அனுப்புவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை**<br>2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 9,239,668 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் 01 வருடத்திற்கு மேற்பட்ட 05 வருடங்களுக்கு குறைந்த ரூபா 2,399,929 நிலுவை மீதியும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 6,839,739 நிலுவை மீதியும் காணப்பட்டது. அந்த நிலுவைத் தொகையினை அறவிடுவது தொடர்பில் முகாமைத்துவம் கவணம் செலுத்தியிருக்கவில்லை. | நிலுவைப் பணம் தொடர்பாக கடை உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் நிலுவை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கும், சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | உடன்படிக்கை காலத்தை விஞ்சியிருந்த சபைக்குரிய 77 கடைகளுக்கான உடன்படிக்கைகளை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காது இருந்ததுடன் கடைகளின் உரித்தைக் கையளிப்பதற்காக 2020 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது கையளித்தல் கட்டணம் அறவிடப்பட்ட 02 கடைகளுக்காக கையளித்தவர்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை கையொப்பம் இடப்படாத மிகுதிக் கடைகளுக்காக 2025 யூன் 30 ஆந் திகதி அளவில் உடன்படிக்கை கைச்சாத்திட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | உடன்படிக்கைகளை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு பெற வேண்டியிருந்த 02 கணக்குகளில் ரூபா 20,253,449 மீதி காணப்பட்டதுடன் அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 583,245 மீதியும் காணப்பட்டது. நீண்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற இந்தப் பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய தொகையினை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 07 கணக்குகளின் பெறுமதி ரூபா 47,645,650 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 8,741,853 மீதியும் காணப்பட்டது. நீண்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற இந்தப் செலுத்த வேண்டிய மீதிகளின் இருப்பு தொடர்பாக கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புப் பணமாக செலுத்த வேண்டிய தொகை தொடர்பாக போதியளவான தகவல்கள் காணப்படாமையினால் உரிய மீதிகளை செலுத்த முடியாமல் இருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகளின் இருப்பைக் கண்டறிந்து விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குரியதாகக் காணப்படுகின்ற ரூபா 22,340,000 பெறுமதியான 03 சொத்துக்கள் 03 வருடங்களுக்கும் 04 வருடங்களுக்கும் இடையிலான காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | சபைக்குரியதாகக் காணப்படுகின்ற விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சபைக்குரிய சொத்துக்களை உச்ச அளவில் செயற்திறனாகப் பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கற்பிட்டி பிரதேச சபையினால் உரிமை போராடப்படுகின்ற சந்தை தொகுதி, வாராந்த சந்தை, பொது விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா, முன்பள்ளிப் பாடசாலைகள், நூலகம், மயான நிலங்கள், பேருந்து நிலையங்களின் பொது மலசல கூடம் மற்றும் சனசமூக மண்டபங்களை உள்ளடக்கிய 69 சொத்துக்கள் கையேற்கப்படாது இருந்ததுடன் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 04 வாகனங்களின் உரித்தைக் கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது கையேற்கப்படாது உள்ள 69 சொத்துக்களுக்காக அதற்குரியதான கையேற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | சபைக்குச் சொந்தமான ஆதனங்களை கையேற்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது 03 பொருள் வகைகளில் 237 விடயங்களில் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. | தீர்த்து வைப்பதற்காக விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனைகளை நடாத்தி பொறுப்பு உத்தியோகத்தரை தீர்மானித்தல் வேண்டும். |
| (இ) | பயன்படுத்த முடியாத நிலையில் உடைந்து காணப்படுகின்ற கெப் வண்டி, கை உழவு இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் போது விற்றுத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | விரைவாக விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் இரண்டாம் தரத்தில் 17 பதவிகளும், ஆரம்ப தரத்தில் 14 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டது. இரண்டாம் தரத்தின் வெற்றிடத்தின் காரணமாக காசு அறவிடல், உப அலுவலக பொறுப்பு உத்தியோகத்தர் போன்ற பொறுப்பு வாய்நத பதவிகளில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஆரம்ப தரத்தின் உத்தியோகத்தர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | இரண்டாம் தரத்தின் வெற்றிடங்களின் விபரங்கள் பிரதம செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப தரத்தின் பதவிகளுக்காக ஊழியர்களை சேர்த்து பிரதம செயலாளரின் மூலம் அனுப்பட்ட பல்நோக்கு உதவி ஊழியர்களுக்கு உரிய வெற்றிடங்களுக்காக அனுப்படப்பட்ட போதும் அதில் அதிக தரப்பினர் தனிப்பட்ட ரீதியில் வசதியீனத்தின் காரணமாக இடமாற்றம் பெற்றுச் சென்றமையினால் மீண்டும் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளது. | வெற்றிடங்களை முறையாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்து சபையின் கடமைகளை முறைமைப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | சேவையை விட்டுச் சென்ற 16 ஊழியர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 289,914 கடன் மீதி ஒன்று மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு ஊழியர்களின் ரூபா 2,177 செலுத்தி பூரத்தி செய்யப்பட்டுள்ளதுடன் மூன்று பேர் பகுதி பகுதியாக செலுத்துகின்றனர். மிகுதி கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவைக் கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் 12 செலவின விடயங்களுக்கு உரியதாக வழங்கப்பட்ட ரூபா 6,339,260 மொத்த நிதியேற்பாடும் உரிய பணிகளுக்காக பயன் படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 இன் பாதீட்டின் மூலதன செலவின விடயத்தின் கீழ் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் முன்னர் இருக்காமையினால் நிர்மாணப் பிரிவின் வேலைகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் மேற்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | பாதீடு செய்யப்பட்ட இலக்கினை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டிற்காக 11 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டு 48 நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டதுடன் மீளாய்வாண்டில் ரூபா 29,635,988 செலவில் 19 நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |